GCG2-4-TA

# சீஷராக்க தைரியப்படுங்கள் : விசுவாசிகளை குருத்துவத்தில் நடத்திட செயல்முறை படிகள் - நிகழ்ச்சி 4

**அறிவிப்பாளர்:** எது முக்கியமான காரியமென்று நினைக்கிறீர்கள், முதலாவதாக இயேசு பின்வரும் பகுதிகளான அமெரிக்கா கேனடா மத்திய அமெரிக்கா, தென் அமெரிக்கா, ஐரோப்பா, மத்திய கிழக்கு பகுதி ஆப்ரிக்கா, ஆசியா பிலிப்பைன்ஸ் ஆஸ்திரேலியா போன்ற இடங்களில் உள்ள கிறிஸ்தவர்கள் என்ன செய்ய வேண்டும் என்கிறார். இயேசு கூறினார், “நீங்கள் போய் சீஷர்களை ஏற்படுத்துங்கள்.” சீஷர் என்றால் என்ன? எப்படி சீஷர்களை ஏற்படுத்த முடியும்? இன்றைக்கு எனது விருந்தினரான ராபி கேலட்டி அதை நமக்கு சொல்ல இருக்கிறார், இவர் 3,200 அங்கத்தினர்களை உடைய சபையின் மேய்ப்பராக இருக்கிறார், நான்கு காலை ஆராதனைகள் நடக்கும், இருந்தாலும் தனிப்பட்ட நபராக வருடந்தோறும் ஏழு முதல் எட்டு பேரை சீஷர்களாக உருவாக்குகிறார். அவர்கள், மாறுத்தரமாக, மற்றவர்களை சீஷர்களாக உருவாக்குகிறார்கள். சரி, இதுவரை நீங்கள் யாரையும் சீஷராக உருவாக்காதிருந்தால், இதை செயல்படுத்துவது சாத்தியம் தானா? நீங்கள் அறிந்துகொள்ள வேண்டிய செயல்முறை காரியங்கள் என்ன? இன்றைக்கு இந்த ஜான் அன்கெர்பெர்க் சிறப்பு தொகுப்பில் அதை தெரிந்துகொள்ள இருக்கிறோம்.

*****

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** நிகழ்ச்சிக்கு உங்களை வரவேற்கிறோம். இன்றைய நிகழ்ச்சியை நீங்கள் தவறிட கூடாது. ஒருவரை சீஷத்துவத்தில் நடத்த தீர்மானிக்கும் போது உண்டாகக்கூடிய தனிப்பட்ட பிரச்சனைகளை எப்படி கையாளுவது என்பதை பற்றி பார்க்க இருக்கிறோம். இந்த உலகத்தை ஆதாயபடுத்த இயேசு நமக்கு ஒரு திட்டத்தை கொடுத்திருக்கிறார். இந்த உலகத்தில் ஏழு பில்லியன் மக்கள் இருக்கிறார்கள். அதில் நான்கரை பில்லியன் மக்கள் தேவனை பற்றி அறியாமல் இருக்கிறார்கள். இயேசுவின் திட்டம் என்ன? அதைதான் பிரதான கட்டளை என்கிறோம். அவர் சொல்கிறார், “வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரம் எனக்கு கொடுக்கப்பட்டு இருக்கிறது.” மேலும் அவர், ஆதலால், சீஷர்களை உருவாக்குங்கள் என்கிறார். இயேசுவை விசுவாசிக்கிற ஒவ்வொருவருக்கும் இந்த கட்டளை கொடுக்கபப்ட்டு இருக்கிறது, அவரை கர்த்தராக இரட்சகராக ஏற்றுகொள்ளும் அனைவர்க்கும் பொருந்தும்.

சரி, இதை நீங்கள் முயற்சிக்கும் விதமாக உங்களை ஊக்குவிக்கும் சில தகவல்களை கொடுக்க விரும்புய்க்றேன். சரி, ஜனங்கள் பெரிய விஷயமாக பார்ப்பது என்னவென்றால், “தயவு செய்து சொல்லுங்க, ஜனங்க நிறைய பிரச்சனையில் இருக்காங்க, அவங்களுக்கு பதில் சொல்ல தெரியல. என்ன சொல்றதுன்னே தெரியலையே என்பார்கள்.” அதையும் இன்றைக்கு நாம் பார்க்க இருக்கிறோம், உங்களோடு தொடர்ந்து சந்திக்கும்படி அழைப்பு கொடுக்கும் நபரிடம் நீங்கள் எதிர்பார்க்காத சில காரியங்கள் நடக்கலாம், அப்ப நீங்க சொல்வீங்க, “நா உங்களை உற்சாகப்படுத்துகிறேன், நீங்க ஜெபிக்கவேண்டும், ஒருவருக்கொருவர் கணக்கொப்புவிக்க விரும்புகிறேன், என்பது போன்ற வார்த்தைகள் உண்டாகும். சரியா.

நமது தேசத்தின் பிரசித்திபெற்ற வேதாகம போதகரை அழைத்திருக்கிறேன், ராபி கேலட்டி. இவருடைய சபையில் 3200 ஆத்துமாக்கள் இருக்கிறார்கள், ஞாயிறு தோறும் நான்கு ஆராதனைகள் நடைபெறுகிறது. இருந்தும், அவர், தனிப்பட்ட சீஷத்துவத்தைதான் முதன்மையாக கொண்டிருக்கிறார். அதில் ஏற்படும் காரியங்களை குறித்து தான் நாம் பார்த்துகொண்டு வருகிறோம், அவர்கள் செய்கிற காரியங்கள்

உங்களுக்கும் பிரயோஜனமாக இருந்திடும். நீங்க பாஸ்டர் இல்லைன்றது எங்களுக்கு தெரியும், நீங்க சாதாரண விசுவாசிதான். நாங்க இரண்டு பேரும் அப்படிதான் ஆரம்பித்தோம், இயேசு கிறிஸ்துவுக்கும் கீழ்படிந்து இதை பின்பற்றினோம். சரி ராபி, ஒருவர் உங்களை எப்படி வரவேற்றார் என்பதிலிருந்து துவங்கிடலாம், முதல் முறையாக, உங்களை அழைத்து, ஒரு ஐக்கியத்தை உண்டாக்கி, இதெல்லாம் எப்படி துவ்னகியது, அதற்கு பிறகு இது எப்படி படர்ந்து வளர்ந்தது நீங்க இதை செய்யணுன்னு எப்போது தீர்மானித்தீர்கள்.

**ராபி கேலட்டி:** சரி. நீங்க சிறப்பான ஒன்றை கேட்டிருக்கீங்கன்னு நினைக்கிறேன். இதன் நோக்கம் ஜனங்களை ஊக்குவிக்க வேண்டும் என்பதுதான, அவங்கலாளையும் இதை செய்ய முடியும் என்று அறிந்திடவேண்டும், இதற்கு நீங்க சூப்பர் கிறிஸ்தவராகவோ பாஸ்டராகவோ வேதாகம போதகனாகவோ இருக்க அவசியமில்லை; எல்லாருமே சீஷர்களை உருவாக்கும்படி அழைக்கப்பட்டு இருக்கிறோம். நா அடிமைத்தனத்தின் வாழ்வில் இருந்து முற்றிலுமாக மீட்கப்பட்டவன். நா ஒரு சமயத்தில் ஹீராயின் மற்றும் கோகேயினுக்கு அடிமையாக இருந்தேன். நா ஒரு கார்விபத்தில் சிக்கியது என்னை இந்த போதை மருந்துகளுக்கு அடிமையாக மாற்றிவிட்டது. மூன்று வருடங்களாக, அடிமைத்தனத்தோடு போராடிகொண்டிருந்தேன். அப்பாவிடம் திருடினேன். கொஞ்சநாள் வீடு இல்லாம இருந்தேன், போக இடமில்லாமல் சுற்றிகொண்டிருன்தேன். தரை அளவிற்கு கீழான வாழ்க்கைக்கு வந்துவிட்டேன், இரண்டு மறுமலர்ச்சி நிலையங்களுக்கு போனதுக்கு பிறகு, இறுதியாக தேவனை நோக்கி கதற துவங்கினேன். நா சொன்னே, “ஆண்டவரே, நீர் இருப்பது உண்மையென்றால், நான் இருக்கிற இந்த கேடான நிலையில் இருந்து என்னை விடுவியும், என் வாழ்க்கையை உமக்காக முழுவதுமாக அர்ப்பணிக்கிறேன் என்றேன்.” ஒரு அசாதாரணமான உருமாற்றத்தின் அனுபவத்தை பெற்றேன். நவம்பர் 12,2002, ஏழரை ஆண்டுகளுக்கு முன்புதான், நான் இரட்சிப்பின் அனுபவம் பெற்றேன்.

அதுவரைக்கும், ஜான், நா வேதத்தை வாசித்தது கிடையாது. அதுவரைக்கு என்னுடைய வாழ்வில் நான் சபைக்கு போவதே அரிதான ஒன்றாயிருந்தது. அதுக்கு முன்பு தேவனை பற்றிய எந்த விருப்பமும் இல்லை. ஆனா தேவன் என்னுடைய வாழ்வில் இடைபட துவங்கினார். அடுத்த ஆறு மாதங்களுக்கு நா, சுற்றிகொண்டே இருந்தேன். என்ன செய்யணுன்னு எனக்கு தெரியல. நா சபைக்கு போனேன், ஆனா வேதத்தை எப்படி வாசிக்க வேண்டும் என்று தெரியாது; எப்படி வசனத்தை மனப்பாடம் செய்வதென்று தெரியாது; வசனங்களை மனப்பாடம் செய்யனுன்றது கூட தெரியாது, எப்படி ஜெபிக்கனுன்னு யாரும் சொல்லி கொடுத்ததும் இல்லை.

திடீருன்னு ஒருநாள் சபையில் ஒருவர் என்னிடம் வந்து, எங்கிட்ட கேட்டார், ஒரு சீஷத்துவ ஐக்கியத்தை உருவாக்குவதில் உங்களுக்கு ஆர்வம் இருக்கிறதா? அதற்கு நா கேட்டேன், “அப்படின்னா, என்ன என்றேன். அதற்கு அவர், “உங்களுக்கு வேதத்தை வாசிக்கவும் சேர்ந்து ஜெபிக்கவும் சேர்த்து வசனத்தை மனபாடம் செய்யவும் ஆர்வமுண்டா என்றார். அதற்கு நான், நிச்சயமாக என்றேன். சரி, அந்த நாள்வரைக்கும், என்னோட வாழ்க்கையில் யாராவது ஐக்கியம் வைக்கணுன்னு ஜெபித்துக்கொண்டு இருந்தேன். அப்பதா டேவிட் என்ற இந்த நபர் என்னுடைய வாழ்வில் இடைபட்டார். அடுத்த ஆறு மாதங்களில், விசுவாசத்தை குறித்த அடிப்படை காரியங்களை அவர் எனக்கு போதித்தார். அவர் தொடர்ந்து சபை காரியங்களில் பிஸியாக அங்கும் இங்கும் பிரயாணிக்க துவங்கியபோது, இன்னொருத்தர் டிம் லீபிளேயர் என்பவர் என் வாழ்வில் நுழைந்தார். டிம் என்னோடு நிறைய நேரம் செலவிட்டார். அந்த சமயத்தில் இருந்து இந்த இரண்டு பேரும் என் வாழ்வில் முக்கிய பங்காற்றிகொண்டிருந்தார்கள். வாராவாரம் அவர்களை சந்திக்க மாட்டேன், இருந்தாலும் நா , விரும்பும்போது எனக்கு உதவியாக நின்றிடுவார்கள், எனக்கு ஆலோசனைகளை தருவார்கள், உதவி என்று கூப்பிடும்போது பதிகொடுப்பார்கள். அவர்கள் என்னுடைய வாழ்வில் என்னை உருவாக்கும் கருவிகலானார்கள்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஆல்ரைட். இப்ப நாம நேரடியாக ஒருசில நுட்பமான காரியங்களை கவனிக்கலாம். எனக்கு நினைவிருக்கு, ராபி, இதை நான் முதல்முறையாக துவங்கியபோது, தங்களுகுடைய கிறிஸ்தவ வாழ்வில் கொஞ்சம் சீராக போய்கொண்டிருந்த சிலரை சீஷத்துவ பட்டியலில் சேர்த்துக்கொண்டேன். அவர்கள் சீராக இருக்கும் கிறிஸ்தவர்கள் என்றிருந்தேன். நாங்க ஒன்றாக கூட ஆரம்பித்தோம், வேதத்தை வாசித்தோம், சில காரியங்களை குறித்து பகிர்ந்துகொள்ள துவங்கினோம், நாங்க ஒன்றாக இணைந்து ஜெபிப்போம், அப்படி போய் கொண்டிருந்த நேரத்தில் தான், திடீரென்று, ஒரு சில கேள்விகளை கேட்டு என்னை அமைத்தி படுத்தி விட்டார்கள். அதாவது, அவங்களோட வாழ்க்கையில் சில பாவங்கள் இருக்கிறது என்று சொன்னது எனக்கு அதிர்ச்சியாக இருந்தது. அந்த பாவங்களில் அவர்கள் ரொம்பவும் போராடிக்கொண்டு இருந்தார்கள். இப்படி பட்ட காரியங்களை குறித்தும் நாம் பேச போகிறோம். ஆனா சொல்லப்போனா, ஜனங்கள் எந்த விஷயத்தை தெரிந்துகொள்ள வேண்டுமென விரும்புகிறேன், என்பதை சொல்ல போகிறேன். உண்மையாக நீங்க ஒருவருடைய வாழ்வில் ஐக்கியப்பட்டால், அவர்கள் நீண்ட காலமாக கிறிஸ்தவர்களாக கூட இருக்கலாம், அவர்களிடத்திலும் சில மறைமுக பாவங்களை பார்க்க முடியும், அப்படிப்பட்ட காரியங்கள் வெளியாவதை நீங்கள் பார்க்க போகிறீர்கள். சரி,அடிப்படையான காரியத்தில் இருந்து நாம் துவங்கிடலாம். சிலருக்கு தாங்கள் உண்மையாகவே இரட்சிக்கப்பட்டிருக்கிறோமா என்ற சந்தேகம் இருப்பதை பார்ப்பீர்கள்.

**ராபி கேலட்டி:** ஆமா. ஒரு விஷயம் இருக்கிறது, முதலாவதாக, இதை நாம் நினைவில் கொள்ள வேண்டும், வயது முதிர்ச்சியை நிர்ணயிப்பது இல்லை. ஒருவர் முதியவராக இருப்பதினாலோ அல்லது சபையில் வாழ்நாள் முழுதும் வளர்ந்திருப்பதாலோ, அவர்கள் ஆவிக்குரிய முதிர்ச்சி பெற்ற கிறிஸ்தவர்கள் என்று சொல்ல முடியாது. அதனால ஆரம்பத்தில் இருந்து துவங்குவது அவசியமாகும். என்னுடைய சீஷத்துவ குழுவில் ஆரம்பத்தில் ஒரு 22 வயது நிரம்பிய வாலிபன் இருந்தான், அபப்தா அவன் சிறையில் இருந்து வந்திருந்தான், மேலும் அதே குழுவில் 50 வயதான ஒரு மூப்பரும் இருந்தார்.

இதுல பல எதிர்மாறான கருத்துக்கள் காணப்படும். ஆனா இந்த இரண்டு நபர்களுக்கும், ஆரம்பத்தில் இருந்து போதிக்க ஆரம்பித்தேன். எதிலிருந்து ஆரம்பித்தேன் என்றால் இரட்சிப்பிளிருந்து துவங்கினேன். இதிலிருந்து துவங்க வேண்டியது ரொம்ப முல்லியம், “தேவனோடு உங்களுக்கு ஐக்கியம் இருக்கிறதா? எனக்கு ஒரு அனுபவம் இருந்திருக்கு, ஜான், ஆறு வாரங்களாக ஒரு நபரை சீஷத்துவத்தில் நடத்தி கொண்டு வந்திருந்தேன். நாங்க இரட்சிப்பின் நிச்சயத்தை குறித்து பேசிக்கொண்டு இருந்தோம். விசுவாசத்தை குறித்த உபதேசத்தை பற்றியும் பேசிக்கொண்டு இருந்தோம். ஆறு வாரங்களாக வேதத்தை வாசித்தும் வசனங்களை மனபாடம் செய்திருந்தும், அவன் என்னை பாதியில் நிறுத்தி என்னிடம் கேட்டான், பாஸ்டர், நா விசுவாசிதானா என்று எனக்கு தெரியல என்றான்.” மேலும் அவன், “இயேசுவை பற்றி நான் வாசித்திருக்கிறேன், இரட்சிப்பை குறித்து கேள்விப்பட்டும் இருக்கிறேன், நான் இதுவரைக்கும் சபையில் தான் வளர்க்கப்பட்டு இருக்கிறேன் என்றான். ஆனா நா ஒரு விசுவாசிதானா என்று எனக்கு தெரியவில்லை என்றான்.” அங்கேயே நிறுத்தி விட்டு, தேவனுக்குள் அவனை நடத்தினேன், மறுபடியும் முதல்ல இருந்து ஆரம்பித்தேன். அதனால இதை புரிந்துகொள்ள வேண்டியது அவசியம், ஒருநபருடைய வயத்தின் காரணமாகவோ அல்லது பல ஆண்டுகளாக சபைக்கு சென்று கொண்டிருப்பவர் என்பதாலோ அவர்களுக்கு கர்த்தருடைய காரியங்கள் எல்லாம் தெரிந்திருக்கும் என்று சொல்ல முடியாது.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஆமா, ஜனங்களை ஊக்குவிக்கும் விதமாக, நானும் இதை ஒத்துகொள்கிறேன், நீங்க ஒன்னே ஒன்னு செய்யுங்க, “அப்படின்னா, சரி, உனக்கு இதுல உறுதி இல்லைன்னா, இப்ப உறுதி செய்திடலாம். அதாவது “கர்த்தருடைய நாமத்தை தொழுதுகொள்ளுகிற எவனும் இரட்சிக்கப்படுவான்.” இயேசு கிறிஸ்து உங்கள் பாவங்களை சுமந்தவர் என்று நம்புகிறோம். உண்மை என்னவென்றால், அவரை தவிர வேறொன்றிலும் உங்கள் நம்பிக்கையை நீங்கள் வைக்காதபோது, நீங்கள் சரியானதை செய்கிறீர்கள் என்றாகும். தேவன் உங்கள் வாழ்வில் வரும்படியாக அவருக்கு அழைப்பு கொடுத்து ஜெபித்திடலாம். அதை நீங்கள் செய்யும்போது அவர்களுக்கு

பின்பற்றுவார்கள்.  நான் என்ன சொல்கிறேன் என்றால், இதை கேட்டு நீங்க அதிர்சியடையவேண்டாம். இதெல்லாம் உண்மையான மக்களுக்குள் காணப்படுகிற காரியங்கள் தான். உண்மையாய் ஒருவரை நீங்கள் நடத்தினால், இதெல்லாம் காணப்படுவது சகஜம் தான்.

இன்னொரு சம்பவம் இருக்கிறது. ஒருமுறை முதல்முறையாக ஒரவர் என்னிடம் வந்தது நினைவிருக்கிறது, சீஷத்துவ பயிற்சியில் இருந்தபோது, என்னிடம் அவன் வாழ்வில் இருந்த பாலியல் பாவத்தை குறித்து சொன்னான். அப்போதுதான் நமது சமுதாயத்தில் இன்றைக்கு நிறைய வாலிபர்கள் அந்தரங்க பாலியல் பாவத்தில் போராடிக்கொண்டு இருக்கிறார்கள் என்பதை நான் கரிந்துகொண்டேன். அது அவர்களுடைய கடந்த கால பாவமாக இருக்கலாம் அலது இப்போது இணையதளங்கள் மூலம் நடக்கிற பாவ கிரியையாக இருக்கலாம், அல்லது நிர்வாண படங்களை பார்க்கும்பழக்கம் இருக்கலாம்,அது எந்த நெறியற்ற செயலாக கூட இருக்க முடியும். என்ன கற்றுகொண்டேன் தெரியுமா, ராபி – உங்களை பற்றி எனக்கு தெரியாது நீங்களும் உங்கள் கருத்துக்களை சொல்லுங்கள் – ஆனா என்ன பொறுத்தவரை, என்னை அவர்கள் நம்பியதற்காக அவர்களுக்கு நான் நன்றி கூறினேன், அவர்களுக்கு உதவியான விதத்தில் என்னால் ஜெபிக்க முடியும் உதவ முடியும் என்று நம்பினார்கள், சரி. அதாவது, நா மயங்கிஎல்லாம் விழுந்திடல, முதல் முறைய மயக்கமே வந்திடுச்சு. நா யோசித்தேன், இவங்க எங்கிட்ட விளையாட்டு காட்டுறாங்க என்று. உண்மையில் இதெல்லாம், ஜனங்களுக்குள் காணப்படுகிற வாதைகளாக இருக்கிறது. மேலும் இயேசு அவர்களோடு இடிபட்டு அவர்களுக்கு உதவ கூடிய காரியங்களும் இருக்கிறது. அவர்கள் பாவத்தை அவரால் மன்னிக்க முடியும் இந்த பகுதியில் அவர் அவர்களுக்கு ஜெயத்தை கொடுத்திடுவார். அவர்கள் செய்யவேண்டிய சில காரியங்களும் இருக்கிறது. அதை தான் நீங்கள் அவர்களுக்கு கற்றுகொடுக்க போகிறீர்கள். அவர்களை கணக்கொப்புவிக்க செய்திட வேண்டும். இருந்தாலும், ஒன்றை நீங்கள் ஏற்றுகொள்ள வேண்டும் அதாவது,

நீங்க கையாளப்போகும் எந்த காரியத்திலும், இந்த பாலியில் பாவங்கள் ஒரு பகுதியாக இருக்கும். உங்களுடைய ஆலோசனை என்ன?

**ராபி கேலட்டி:** சரி. நீங்க ஒருவருடைய வாழ்வில் தாக்கத்தை உண்டாக்க வரும்போது, இந்த சீஷத்துவ பாதையில், அது கேடு நிறைந்து காணப்படலாம், ஏன்ன சபைகளில் மேலோட்டமான உறவுகள் தான் காணப்படுவதாக இருக்கிறது. அதாவது, எப்படி இருக்கீங்க, ஜான்? நா நல்லா இருக்கே, நீங்க எப்படி இருக்கீங்க? ஒரு சாதாரண விசுவாசியின் வாழ்வில் இதுதான் காணப்படுவதாக இருக்கிறது. ஆனா ஒருவருடைய வாழ்வில் உள்ள போகும்போதுதான், அவர்களை பற்றிய காரியங்களை நீங்கள் அறிந்துகொள்வீர்கள். அதாவது, மறைமுக பாவங்களை உடைவயர்களோடு இத்தனை ஆண்டுகளாக ஜெபித்துவந்ததில் நான் கற்றுக்கொண்ட விஷயம், மேலோட்டமான உறவில் உங்களுக்கு எந்த காரியமும் புலப்படாமல் இருக்கும். ஆனா இப்ப ஒரு குழுவில் இருக்கும்போது அங்க கணக்கு கொடுக்க வேண்டியிருக்கிறது, உண்மை இருக்கிறது; மறைவான பாவங்கள், அறநெறியற்ற நிலை, நீங்க  சொன்னதுபோல, இதெல்லாம் வெளிவர ஆரம்பிக்கும். “பாஸ்டர், நா போராடிட்டு இருக்கேன், அல்லது “ஜான் ராபி, இதனால நா ரொம்ப கஷ்டப்பட்டுட்டு இருக்கிறேன்.”  அடிமைப்பட்டிருத்தல்: இதெல்லாம் நடக்குமா என்று நீங்கள் எதிர்ப்பார்க்காத அடிமைத்தனங்கள் இருப்பதை பார்ப்பீர்கள்.

நான் முன்பு இருந்த சபையில் நான் சீஷத்துவ குழுவை நடத்துகிறேன் என்று கேள்விப்பட்ட ஒரு நபர் என்னிடம் வந்தார், அவர் ஒரு சபை அங்கத்தினரை கூட்டீட்டு என்னுடைய அலுவலகத்திற்கு வந்திருந்தார். அவர் அலுவலகத்திற்குள் நுழையும்போது, அவரிடத்தில் ஏதோவொரு வித்தியாசம் இருப்பதை நான் உணர்ந்தேன். அவருடைய வாழ்வில் ஏதோ அசுத்த கிரியை இருப்பதை உணர்ந்தேன். சரி,ஒரு விஷயத்தை கண்டறிந்தேன், இவர் ஆண்டன் லேவியுடைய சீஷனாக இருந்திருக்கிறார், அவன்தான் சாத்தான் சபையின் பிரதான ஆசாரியனா இருக்கிறான். இவன் சாத்தானை வழிபட்டு வந்தவன். இங்க எப்படிப்பட்ட எதிர்நிலை இருக்கிறதென்று உங்களுக்கே புரியும்,

ஆவிக்குரிய யுத்தம் நடந்துகொண்டு இருக்கிறது. இவன் சாத்தனை தொழுதுகொள்ளும் நபர், நா இயேசு கிறிஸ்துவை ஆராதிப்பவன். இப்ப தத்ரூபமாக அந்த தீய பிரசன்னத்தை, கத்தியாள, அறுத்தெறிய முடியும், கற்பனை செய்துபாருங்கள்.

இந்த மனுஷனோடு ஒருமணிநேரம் பேசிமுடித்த பிறகு – அவனோடு நான் ஐக்கியம் வைக்க வேண்டியிருந்தது ஏன்னா அவன் போதைக்கு அடிமையாக இருந்தான் கேடான ஒரு கடந்த காலத்தில் இருந்தேன் – அவனிடம் நா சொன்னேன், இங்க பாறு, “கவனி, தேவனால இதை மாற்ற முடியும். உனக்கு இருக்கிற எல்லா கேள்விகளுக்கும் இயேசுதான் பதில். உனக்கு இருக்கிற எல்லா பிரச்சனைக்கும் இயேசுதான் தீர்வு என்றேன்.” அவன் கேட்டான், இயேசு எனக்கு இதை செய்திடுவாரா? அவனோடு சேர்ந்து முழங்கால் போட்டு, கூட வந்தவரும் இருந்தார், கிறிஸ்து அவனுடைய வாழ்வில் பிரவேசிக்குமாறு ஒன்றாக சேர்ந்து ஜெபித்தோம். அவன் முழங்காலில் இருந்து எழுந்ததும், நான் அழுதேன், அவனும் அழுதான், நாங்க சீஷத்துவ ஐக்கியத்தில் ஒன்றாக இணைந்தோம். சரி, இந்த மனிதனுக்கு இருந்த கேள்விகளை யோசித்து பாருங்கள். பல வருடங்களாக அவன் கற்றுக்கொண்டு கடைபிடித்துவந்த கெட்ட பழக்கங்கள்.

அதனால நீங்க ஆரம்பத்திலிருந்து துவங்கிடவேண்டும். அவன் ஒவ்வொன்னையும் என்னிடம் சொல்லும்போது நான் யோசித்து பார்ப்பாஎன், “வாவ், நீயா அப்படி செய்த? என்னால நம்ப முடியலன்னு நா சொல்லல. நா வந்து, அதாவது இதுல, தேவனால உனக்கு உதவ முடியும் என்பேன். நா [பொறுமையா அமைதியா இருக்க வேண்டியது ரொம்ப அவசியம் ஜனங்களுடைய வாழ்வில் நாம் இடைப்படும்போது, இதுவரைக்கு கேள்விபடாத விஷயங்களை நானா கேள்விபட வேண்டியிருக்கும்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** சரி. இப்போது ஒரு இடைவேளை எடுத்துகொள்வோம்.

திரும்ப வந்ததும், சில கேள்விகளுக்கு பதிலளிக்க விரும்புகிறேன், உங்களுக்கு கருத்துக்களையும் விரும்புகிறேன், சிலர் சொல்வார்கள், நா நிறைய பாவம் செய்திருக்கிறேன். நா செய்தவைகளுக்காக தேவன் ஒருபோதும் என்னை மன்னிக்க

மாட்டார், நா கேடுகெட்ட ஜந்து என்பார்கள்." சரியா. அதாவது தங்களை அபாத்திரமாக பார்க்கிற மக்கள், சரியா? இப்படிப்பட்டவர்கள் நிறையபேர் இருக்கிறார்கள். ஒருவேளை நீங்களும் அவர்களில் ஒருவராக இருக்கலாம். தொடர்ந்து பாருங்கள். சில நொடிகளில் மீண்டும் சந்திக்கிறோம். தொடர்ந்து இணைந்திருங்கள்.

*****

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஆல்ரைட், மீண்டும் வருக. நாம் ராபி கேலட்டியுடன் பேசிக்கொண்டு இருக்கிறோம், நமது தேசத்தில் பிரசித்திபெற்ற வேதாக போதகர்களில் ஒருவர். மற்றவர்களை சீஷர்கலாக்குவதில் உள்ள நடைமுறை காரியங்களை பற்றி பார்த்துகொண்டு இருக்கிறோம். நீங் அஒருவேலியா உண்மையாய் தேவனிடத்தில், "சரி, நா இன்னொரு நபரை ஊக்குவித்து சீஷராக உதவ விரும்புகிறேன், இன்னொரு விசுவாசிக்கு, எப்படி வேதத்தை வாசிப்பது என்றும் எப்படி ஜெபிப்பது என்றும் எப்படி வசனங்களை மனப்பாடம் செய்து கணக்கொப்புவிப்பவராக இருப்பது என்றும் கற்றுத்தர விரும்புகிறேன் என்று சொல்பவரா." இப்போதும் நாம் இந்த சீஷத்துவ ஐக்கியத்தில் உண்டாகும் அதிர்சிகரமான விஷயங்களை பற்றி பார்த்துகொண்டு இருக்கிறோம். இந்த சீஷத்துவ பாதையில், நிறைய பேர் சொல்வாங்க, "அதாவது, தடுத்து நிறுத்த முடியாத கடந்த கால நினைவுகள் உள்ளது; தேவன் என்னை நேசிக்கிறார் என்பதை என்னால் உணர முடியவில்லை. அவர் என்னுடைய பாவங்களை மன்னிப்பார் என்று எனக்கு தோன்றவில்லை; நா மகா பாவி என்பார்கள்."

சில நொடிகளில் இதை குறித்த தனது கருத்தை ராபி சொல்லும்படி கேட்கிறேன். ஆனால் நான் ஒரு காரியத்தை பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன்: இரண்டு சாலைகளை கற்பனை செய்திடுங்கள். அதில் ஒரு சாலை சீராக பழம் மாதிரி இருக்குது எப்பவாவது ஒருமுறை கொஞ்சம் கரடுமுரடா இருப்பதுபோல இருக்கும், அப்ப மட்டும் கொஞ்சம் குலுங்கி குலுங்கி போகும்படி இருக்கும். ஆனா பெரும்பாலான சமயம், அது மென்மையா இருக்கும். கிறிஸ்தவ வாழ்வில் இருக்கும் பெரும்பாலான ஜனங்கள், தங்கள் வாழ்க்கையை இப்படிதான் அவர்கள் பார்க்கிறார்கள். சாலையில் சில வேகத்தடைகளை

சந்திக்க நேரிடும், ஆனா அது பெரும்பாலும் மென்மையாகத்தான் இருக்கும். இன்னொரு கூட்ட மக்களும் இருக்காங்க, அவங்களுடைய சாலையில், குண்டும் குளிலும் ரொம்ப ஆழமா பெரிதாக இருக்கும். உங்களுக்கு கார்களை இழக்க கூடிய அளவு பெரிய பள்ளங்கள் இருக்கும். சில வேளைகளில் அந்த குண்டு குழிகள் உங்களை சாலைக்கு வெளியில் எறிந்துவிடும். ரொம்ப ஆழமான பள்ளம், கேடான சாலைகள். நீங்க ஒருவேளை, ஆமா, ஆமாம்பா, என்னோட வாழ்க்கை இப்படியிருக்கு என்றிடலாம்.

இப்ப ஒரு பனிப்புயல் வருவது போல கற்பனை செய்திடுங்கள். பணி விழுந்துகொண்டு இருப்பதை நேநேகள் பார்க்கும்படி விரும்புகிறேன், இரண்டு சாலைகளிலும் பணி விழுகுது. இரண்டு அடிக்கு பணி விழுது, சிறிய குண்டு குழி இருந்தாலும் பெரிய குண்டு குழி இருந்தாலும், இப்ப இரண்டு சாலைகளையும் பனிபடலம் விழுந்து மூடி போட்டதும் இரண்டும் சீராக இருப்பது போல தெரியும். அதுதான் நம்மை நம்முடைய எல்லா பாவங்களில் இருந்து சுத்திகரிக்கும் இயேசு கிறஸ்துவின் இரத்தமாக இருக்கிறது. நீங்க என்ன பாவம் செய்திருந்தாலும், இயேசு கிறிஸ்து உங்களை முற்றிலுமாக சித்திகரிக்கிறார். சரி ராபி, நான் சொன்ன உதாரணத்தின் மூலமாக ஜனங்கள் இயேசுதான் இரட்சகர் என்பதை புரிந்துகொண்டிருப்பார்கள் என நம்புகிறேன். அவங்க என்ன செய்திருந்தாலும் சரி, அந்த பிரச்சனைகளை சரிசெய்ய அவர் போதுமானவராக இருக்கிறார். நீங்க வேறென்ன சொல்ல இருக்கீங்க?

**ராபி கேலட்டி:** சரி, நா ஒருமுறை நேவியில் பிடிபட்ட ஒருவருக்கு ஊழியம் செய்தது எனக்கு நினைவிருக்கிறது. அவர் கொலைசெய்ய படும்படி கொண்டு போகப்பட்ட நேரங்களாய் குறித்து சுருக்கமாக சொன்னார். இவர் சில சமயங்களில் பிணை கைதிகளை பிடிப்பவராக மற்றவர்களை கொலை செய்கிற நபராக இருந்திருக்கிறார். அவர் தேசத்திற்காக பாடுபட்டு தனது யுத்தங்களை எல்லாம் முடித்து திரும்ப வந்திருக்கிறார், அவர் விசுவாசியாக மாறிய பிறகு அவருடைய வாழ்வில் ஒரு பிரச்சனை வந்தது, வாழ்க்கையே முடித்துகொள்ளும் நிலைக்கு இருந்தது. நா அவரோட மதிய உணவு சாப்பிட போகும்போதும் அரிதாக இந்த கதைகளை பற்றி பேசியிருக்கிறோம். ஆனா

அவங்க மனைவி பலமுறைய என்னை அழைத்து, பிரதர், பாலால தன்னை மாணிக்க முடியாம அவதிபடுகிறார் என்றிருக்கிறார். தேவன் அவரை மணிப்பார் என்பதை ஏற்றுகொள்வதில் அவருக்கு போராட்டம் இருந்தது.” எனக்கு நினைவிருக்கு அவருடைய மரண படுக்கையில், நா ஆஸ்பத்திரியில் தான் இருந்தேன். அவரால அதிகம் பேச முடியாது. நா அவரிடத்தில் கேட்டேன், சொல்லுங்கள், “தேவன் உங்களை மன்னித்து விட்டார் என்று நீங்க விசுவாசிக்கிறீங்களா? அதற்கு அவர் சொன்னார், நா விசுவாசிக்கிறேன்” மேலும் அவர், எனக்கு புரிஞ்சுக்க முடியல என்றார். நா சொன்னேன், தேவன் உங்களை மனித்திருக்கிறாரா என்பது இப்ப பிரச்சனை இல்லை. பிரச்சனை என்னன்னா நீங்க உங்களை மணிக்காததுதான் என்றேன்.” அங்கயே ஆஸ்பிடல்ல அவருக்காக ஜெபித்தேன், அவர் தன்னை மன்னிக்கும்படி ஜெபித்தோம். அதுதான் பலருடைய வாழ்வில் இருக்கும் பிரச்சனையாக இருக்கிறது. தேவன் நம்மை மன்னித்துவிட்டார் என்று நமது மூளைக்கும் தெரியும், ஆனால் பிரச்சனை என்னன்னா, அந்த பாரங்களை நாம இன்னும் சுமந்துகொண்டு நம்மை நாமே மன்னிக்காம இருக்கிறோம்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** சரி. என்னை பொறுத்தவரை இதுதான், ஓரிரண்டு பேர் இருக்கும் குழுவில், அல்லது ஒருவரோரு ஒருவர் பேசும்போது, வசனத்தின்படி, “நம்முடைய பாவங்களை அறிக்கைஇட்டால்” இது இரண்டு விதத்திலும் செயல்படுத்து தேவன் – எல்லா அநீதியையும் நம்மை விட்டு அகற்றி நம்முடைய பாவங்களை மாணிக்க அவர் உண்மையும் நீதியும் உள்ளவராக இருக்கிறார் – இதில் சுவாரசயமான விஷயம் என்னவென்றால் சிலவேளைகளில் நாம் மற்றவர்களோடு பகிர்ந்துகொள்ளும்போது, உண்மையில், தேவன் நமக்கு பெலன் தந்திடுவார். அவர்கள் நம்மிடம், “உங்களை, அப்படியே ஏற்றுகொள்கிறேன்என்பார்கள். என்னுடைய வாழ்வில் ஒருசில காரியங்களில் தேவன் என்னை சுத்திகரித்து இருக்கிறார். உண்மை என்னவென்றால், நானும் பாவிதான் நீங்களும் பாவிதான். யாரும் பரிபூரனமானவர்கள் கிடையாது. அதுமட்டுமல்ல, இரண்டு பேரும் சேர்ந்து இதை சரிபடுத்திடலாம். இப்படி ஏற்றுகொள்ளபடுவது, குழுவிற்குள்

நடக்கும், அது அருமையாயிருக்கும். சரி, நாம் பேச வேண்டிய இன்னொரு விஷயம் ரகசியாம வைத்துகொள்ளும் நிலை. ஒரு பிரச்சனை பகிர்ந்துகொள்ளப்படும்போது, அந்த காரியங்களை உண்மையாய் ரகசியமாக வைத்துகொள்வது அவசியம். அதை சொல்லுங்கள்.

**ராபி கேலட்டி:** ஆமா. ஒருசீஷத்துவ குழுவில், நம்பிக்கை என்பது மிகவும் முக்கியமான ஒன்று. ரகசியங்கள் பாதுகாக்கப்படணும். விசுவாசிகளின் மத்தியில் பெரும்பாலும் பார்க்கும்போது, இன்னொருத்தர் அடுத்தவரை பற்றி சொல்ல கேட்ப்போம், இப்படி புரளி பேசுவதை ஜெப குறிப்பாக எடுத்துகொள்கிறோம். நம்முடைய நண்பர்களை அழைத்து சொல்வோம், ஹே, கேட்டியா, உங்கிட்ட மட்டும்தான் சொல்றேன். நீ யார்கிட்டயும் சொல்லிடாதே, நாம ராபிக்காக ஜெபிக்கனுன்னுதா சொல்றேன். ராபி இந்த பிரச்சனையோடு போராடிட்டு இருக்கான், அவன்தா சொன்னான் என்றிடுவோம்." இது புரளிபேசுதல். சீஷத்துவ குழுவில், ரொம்ப முக்கியம் இதுதான் குழுவுக்குள் பேசபப்டுகிற எதையும், குழுவுக்குள் மட்டும் வைத்துகொள்ள வேண்டும். ஒருவரை ஒருவர் நம்ப துவங்கிடும் போது... உடனடியாக இப்படி நடக்காமல் இருக்கலாம். சிலவேளைகளில் என்னுடைய குழுவில் ஒருமாதத்திற்கு பிறகுதான் பேச ஆரம்பிப்பாங்க. சில சமயங்களில், ஜான், ஆறு முதல் எட்டு மாதங்களாகும், சில நேரத்தில் ஒரு வருடத்திற்கு பிறகுதான் பசங்க என்னை தனியா கூப்பிட்டு பேசுவாங்க, "பாஸ்டர், இதை பத்தி நாம பேசனும்." ராபி, குழுவில் நாம இதை பத்தி பேசனும் என்பார்கள்." நேரம்தான் பதில் சொல்லணும். ஆனா ரகசியங்களை பாதுகாக்க வேண்டியது ரொம்ப முக்கியம்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஆமா, நீங்க சொன்னது முற்றிலும் உண்மைதான். அதாவது, இதற்கு அதிக நேரம் எடுப்பது போல இருக்கும் – நீங்க எதிர்பார்ப்பதைவிட அதிக நேரமாகும் – ஜனங்கள் சீக்கிரத்தில் தங்கள பிரச்சனைகளை சொல்ல மாட்டாங்க, ஏன்னா இதுவரைக்கும் யார்கிட்டயும் அவங்க பகிர்ந்திட்டது கிடையாது. அவங்களே இதை ஏற்றுகொள்ள ரொம்ப கஷ்டப்பட்டு இருக்காங்க, அவ்னகளாக முடியல,

முடியாமதா சிராங்க, சரியா. அப்ப அதெல்லாம் வெளியில் வரும்போது, நீங்க, அவங்ககிட்ட, இதை என்னோடு பகிர்ந்திட்டதுக்காக நன்றி. உண்மையில் ஒரு விஷயத்தை  நீங்க தெரிஞ்சுக்க விரும்புகிறேன், அந்த பாவத்தை இயேசுவால மன்னிக்க முடியும். உண்மையில், நீங்க இதை செய்திருந்தாலும் உங்களை ஏற்றுகொள்வேன், அதுதான் உண்மை, கிறிஸ்துவுக்குள் உங்களை சகோதரனாக ஏற்றுகொள்கிறேன். நானும் என்னுடைய வாழ்வில் சிலவற்றை செய்திருக்கிறேன் நீங்களும் உங்களுடைய வாழ்க்கையில் சிலவற்றை செய்திருக்கிறீர்கள் இருவரும் மனிக்கப்பட்டிருக்கிறோம். அதனால தொடர்ந்து முன்னேறிடலாம்.

**ராபி கேலட்டி:** சரி. அதாவது, விஷயம் என்னன்னா, எனக்கு பதில் தெரியாத பல கேள்விகள் என்னிடம் கேட்கப்பட்டு இருக்கிறது, உண்மைதான். அதாவது, சில சமயங்களில்ஜனங்க என்னிடம் வந்து கேட்பாங்க, “இதற்கு என்ன அர்த்தம்? நா என்ன செய்ய வேண்டும்? அலது இந்த சூழ்நிலையை நான் எப்படி எதிர்கொள்வது? சீஷத்துவ பயிற்சியில் ஒரு விஷயத்தை உங்கள் குருத்துவ மக்களுக்கு நினைப்பூட்ட வேண்டும் அதாவது நீங்கள் சந்திக்க நபர்கள் கேட்க்கிற எல்லா கேள்விகளுக்கும் உங்களிடம் பதில் இருக்காது என்பதை புரிய வையுங்கள். எல்லா பதிகளும் தெரியாமல் இருந்தால் அதில் தவறு இல்லை; ஆனால் அதற்கான பதிலை எங்கு பெறுவது எனபது தெரிந்திருக்கணும்.

ஹென்றி போர்ட் பற்றிய கதை  நினைவிற்கு வருகிறது. ஹென்றி போர்ட் புகல்பற்றிருந்த நாட்களில், அவர்தான் உலகத்திலேயே சிறந்த நபர் என்று சொல்லப்பட்டு வந்தார். அவர் தாக்கப்படுவதை சிலர் பார்க்கும்படி விரும்பினார்கள் அவங்க என்ன செய்தாங்கனனா, ஒரு பேனல்ல ஹென்றி போர்டையும் சில மேதைகளையும்  ஒரே இடத்தில் நிறுத்தி அவரை கேள்வி கேட்கும்படி செய்தனர். அவரிடத்தில் அவர்கள் கேள்விகளை கேட்க துவங்கினார்கள். “Mr. போர்ட், வேதியியலை பற்றிய இந்த கேள்வி உங்களுக்கு தெரியுமா? முதல் கேள்வி, அவர் பிரதியுத்தரமாக, சொன்னார், இல்ல, இதற்கான பதில் எனக்கு தெரியாது.” அதற்கு அவங்க, சரி, இப்ப, உங்களுக்கு அடுத்த கேள்விய கேட்கிறோம். அமெரிக்க வரலாற்ற குறித்த ஒரு கேள்விய கேட்கிறோம். யுத்தத்தை

பற்றிய கேள்விகள் உங்களுக்கு தெரியுமா, எப்போது போர் நடந்தது? அதற்கு அவர் சொன்னார், “இல்ல, இந்த கேள்விக்கு எனக்கு பதில் தெரியாது. அவர்கள் அவரிடம் இன்னொரு கேள்வியை கேட்டார்கள். மூன்று கேள்விகளுக்கு பிறகு, அவர்கள் அவரிடம், “Mr. போர்ட் நீங்கதான் உலகிலேயே ஞானமான நபராக இருக்கவேண்டும் ஆனா உங்களுக்கு இந்த கேள்விகளுக்கு பதில் தெரியலையே என்றார்கள். “அதற்கு அவர் என்னுடைய மூளைக்கு எல்லா பதில்களும் தெரியும் என்பதினால் நான் உலகிலேயே மிகபெரிய ஞானியாகவில்லை ஆனால் விடைகளை எங்கு பார்க்கவேண்டும் என்று எனக்கு தெஇர்யும் என்றார்.” நா நினைக்கிறேன் ஒரு விசுவாசிக்கு, எல்லா பதில்களையும் சொல்ல வேண்டிய அவசியமில்லை, இதற்கு எனக்கு விடை தெரியாது எண்டு சொல்வதில் எந்த தவறும் இல்லை. ஆனா எங்கு விடையை தேடவேண்டும் என்று தெரிந்திருந்தால் போதும்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** கணக்கொப்புவித்தலை பற்றி சொல்லுங்க, இதற்கான பதிலின் ஒரு பகுதியாக இருக்கிறது, பாவத்தின் மீது ஜெயம் பெற, மறைவான பாவங்கள், மற்ற எல்லா பாவங்கள். இதையெல்லாம் வெளிபடுத்த முன்வருவதற்கு நீங்கள் முதலில் ஒருவருக்கு கணக்கொப்புவிப்பவராக இருக்கவேண்டியது அவசியம். ஒருவிஷயத்தை சேர்த்திட விரும்பிறேன், ஓகே? தொடர்ந்து இதை தவரிடம் நபருடைய நிலை எபப்டி இருக்குன்னு சொல்லுங்க?

**ராபி கேலட்டி:** நல்லது. அருமையான கேள்வி. சங்கீதம் 119, சொல்கிறது, சங்கீதம் 119:11 கூறிக்றது, “நான் உமக்கு விரோதமாக பாவம் செய்யாதபடி உமது பிரமாணங்களை என் இருதயத்தில் வைத்துவைத்தேன்.” தேவன் – இவர் தேவனிடத்தில் பேசுகிறார். ஒரு விஷயத்தை தெரிந்துகொண்டேன் தேவ வார்த்தையை தியானித்து மனப்பாடம் செய்யும்போது, நமது வாழ்க்கையை நா வார்த்தையோடு இணைத்துவிடுகிறோம், மறக்கப்பட்ட பாவங்களோடு இடிபடா வேண்டியிருக்கிறது. அதாவது, பாவத்தை நாம் மேற்கொள்ளும் விதங்களில் ஒன்று, எபேசியரில்

சொல்லப்பட்டிருக்கிறது போல, அது ஆவியின் பட்டயத்தினாலும் தேவன் வார்த்தையினாலும் உண்டாகிறது,இது பட்டயம் எனப்படுகிறது. மேலும் இந்த வசனங்கள் எல்லாம் அதை அதாவது வாசனைகளை நாம் தியானிக்கும்போது, நமது வாழ்விலுள்ள பாவங்களை தாக்கிட முடியும் நம்மை உருத்திடும் காரியங்களை மேற்கொள்ள முடியும். ஜனங்களால் மேற்கொள்ள முடியாத பாவ சூழ்நிலைகளை நம்மால் எதிர்கொள்ள முடியும் அதை மேற்கொள்ளவும் முடியும். கால தாமதமாகலாம். நடக்காமல் போகும் எந்திருக்கலாம். அப்படிப்பட்ட நபர்களை விட்டு விலகாமல் அவர்களுக்காக இருக்கிறோம் என்பதை புரியவைப்பது மிகவும் முக்கியம்.

சரி, சில நேரங்களில் ஒருவரை உங்கள் குழுவில் இருந்து அகற்றவேண்டிய நேரமும் வந்திடலாம். எப்போதும் என்னிடம் இந்த கேள்வி கேட்கப்படும். சீஷத்துவ ஐக்கியம் எப்போது முடித்து கொள்ள வேண்டும்? ஒரு குழு இருந்தது அதில் இரண்டு பேர் வாரம் ஒருமுறை வந்தார்கள் ஒருவர் எப்போதாவது வந்திடுவார். என்ன நடக்கும் தெயர்யுமா இவன் மற்றவர்களை கீழே இழுப்பவர்களாக மாரிடுவார்கள். அப்பா என்ன நடக்கும் ஒரு குறிப்பிட்ட நேரம் வந்ததும் நீங்க அவர்களிடம், “கவனிங்க, உங்களை நேசிக்கிறோம், பிரதர். உங்களோடு சேர்ந்து செயல்பட விரும்புகிறோம். ஆனா என்னை பொறுத்தவரை, உங்களுடைய செய்கைகள் எல்லாம், நீங்க இதுல கவனமா இல்லாதது போல தோன்றுகிறது. நீங்க சீஷத்துவத்தில் இருக்க முடியாது என்பதல்ல, என்னால உங்களை சீஷனாக்க முடியாது என்பதில்லை, ஆனா இப்ப உங்க வாழ்க்கையில், இது சரியான நேரம் இல்லை. அன்போடு எப்போதும், உங்களுக்காக இருக்கிறேன், தூரத்தில் இருந்து உங்களுக்காக ஜெபிக்கிறேன், ஆனா இப்ப உங்களை இந்த குழுவில் இருந்து விளக்கிட நினைக்கிறேன் என்றிடுங்கள்.”

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** சரி, இன்னொரு விஷயத்தை பற்றியும் நான் யோசிக்கிறேன் சிலரோடு நாம பொறுமையாக இருக்க வேண்டி இருக்கிறது, சில சமயங்களில் தங்கள் பாவங்களை அறிக்கையிடுகிறவர்கள், பழக்கங்கள், மறைமுக பாவங்கள், இதையெல்லாம் ஒரே ராத்திரியில் விட்டுவிட்டு மாறிட போவது கிடையாது.,

சில சமயங்களில் நீங்க ஏ இப்படி இருக்கீங்க உங்களுக்கு என்ன நடக்குது என்று உங்களுக்கே புரியாமல் இருக்கும். இங்கதான் உங்களுக்கு ஜெபங்களுக்கு நீங்க மனபாடம் செய்கிற வசனங்களும் வேலை செய்ய ஆரம்பிக்கும். தேவன் உங்கள் மனதை மறுரூபமாக்கி உங்களுக்குள் மாற்றத்தை ஏற்படுத்த துவங்கிடுவார். ஒரு நபர் எப்படி செயல்படுவார் என்பதை அறிந்து கொள்ள நாம Ph. D படிக்க முடியாது. சரியா. இங்க தேவன் தான் மருத்துவராக இருக்கிறார். தேவன் தான் பேராசிரியராக இருக்கிறார். தேவனிடம் மட்டும்தான் பதில்கள் இருக்கிறது. எங்களுடைய வேலை அவர்களை தேவனுடனான உறவில் நிலைபடுத்த உதவுவதுதான் அவர்களோடு சேர்ந்து ஜெபிக்கலாம், அவர்களை ஊக்குவிக்கனும், அவர்களுக்கு ஏற்ற வசனங்களுக்கு நேராக அவர்களை நடத்திடனும். சிலசமயங்களில் கூடுதலான சில உதவிகள் செய்யப்பட வேண்டியிருக்கும். புத்தகங்கள் இருக்கிறது, இந்த பாதியில் சில இடங்களில் ஆலோசகர்களின் வழிநடத்துதல் தேவைப்படும். இதுல வேதாக ஆலோசகர்கள் தான் இருக்கணும். தேவனுடைய வேதத்தின் கோட்பாடுகளை எடுத்து தன்னிடத்தில் ஆலோசனைக்காக வருகிரவர்களிடத்தில் அதை அப்பியாசிப்பவர்களாக இருக்க கூடிய நபர்கள். இதோடு நீங்க ஏதாவது சொல்ல விரும்புகிறீர்களா?

**ராபி கேலட்டி:** ஆமா, ஒரு விஷயம் மட்டும், ஜான் ஓவென, சிறந்த மனிதர், சொல்லுகிறார், "நீங்க பாவத்தை கொன்றிடுங்கள், அல்லது பாவம் உங்களை கொன்று விடும்." சீஷத்துவ குழுவின் அழகு இதுதான் என்று நான் நினைக்கிறேன்" முதல் தடவை குழுவில் இருக்கிற ஆண்களும் பெண்களும் தங்கள் பாவங்களை அவர்கள் அறிக்கை செய்திடும்போது, இதுதான் பாவம் என்று தெரியும், பாவத்தை அடையாளம் காண்பார்கள், அந்த பாவத்தில் இருந்து வெளிவர உழைத்திடுவார்கள். கடந்த காலத்தில் நடந்தது வேறொரு இடம் போல தோன்றிடும். அதனால, ஒரு குழுவில் இருபதே கணக்கொப்புவிக்கும் தன்மையை உருவாக்குவதாக இருக்கிறது, அதுவரைக்கும் அப்படி ஒன்று அவர்களுக்கு நடந்திருக்காது. அதனால் சில வேலைகளில் உங்களுடைய வாழ்வில்

உள்ள பாவங்களை தாக்கும்போது அது விலகிட நேரமெடுக்கும் என்பதை அறிந்திட வேண்டும்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** சரி. ஒரு உண்மையையும் சொல்லுகிறேன், எனக்கு நினைவிருக்கிறது தாங்கள் செய்த காரியங்களை ஒரு சிறிய குழுவில் சொல்வதை மக்கள் ஏற்றுகொள்ளுகிற மனப்பான்மையோடு இருக்கிறார்கள். இது மற்றவர்கள் தங்கள் குற்றங்களை ஒப்புகொள்ள உதவியாக இருக்கிறது. திடீரென்று, எல்லா மதிகளும் உடைந்திட எல்லாரும் சமமாக தோன்றுவார்கள். அப்போது உங்களுக்கு தேவன் வேண்டும் என்றுபுரிந்துகொள்வீர்கள். தேவன் மாத்திரமே உடைந்த காரியங்களை திரும்பவும் ஒன்று இணைக்கிறவர். ஒருவருக்காக ஒருவர் தேவனிடத்தில் வந்து சேர்ந்திடுவீர்கள். தேவனும் இங்கு ஒரு காரியத்தை செயல்படுத்துகிறார், எல்லாருடைய இருதயத்தை கரைத்து எல்லாரையும் ஒன்றாக இணைகிறார். இதை மறுக்கவே முறியாது.

அடுத்த வாரமும் சீஷத்துவத்தில் இருக்கும் நடைமுறை காரியங்களை தொடர்ந்து பார்க்க இருக்கிறோம். அடுத்த வார நிகழ்ச்சியில் பார்க்க போவது: ஜனங்கள் போய் மற்றவர்களுக்கு போதித்து அவர்களை சீஷர்களாக உருவாக்குவது எப்படி? அவர்கள் எப்போதும் நீங்கள் பிரித்து விடவேண்டும்? அவர்கள் தாங்களாக எப்போது புறப்பட்டு போகணும்? அவர்கள் அதை எபப்டி செயல்படுத்திடவேண்டும்? அடுத்த வாரம் இதை குறித்து நாம் பார்க்க இருக்கிறோம்.

*****

எங்களுடைய தொலைக்காட்சி நிகழ்சிகளை காண

இலவச ஜான் அன்கொர்பெர்க் நிகழ்ச்சி ஆப்பை பதிவிறக்கம் செய்திடுங்கள்.

இயேசு கிறிஸ்துவை ஏற்றுகொள்வதற்கான ஜெபம் @JAshow.org

@2015 A.T.R.I.